# இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் வஹி (இறைசெய்தி) தொடர்பான புனைவுகள் ஓர் ஆய்வு

MASF. Saadiya (Senior Lecturer Department of Languages, South Eastern University of Sri Lanka)

saadhiyaf@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இஸ்லாமியத் தமிழ் இலக்கியமாகக் கொள்ளப்பட்டுள்ள காவியங்கள், சிற்றிலக்கியங்கள், அரபு, பாரசீக வழிவந்த இலக்கியங்கள், அறபுத்தமிழ் இலக்கியங்கள் முதலியவற்றில் நபிமார்கள், அவ்லியாக்கள், மற்றும் சில பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகள், இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்ற சில போர்கள், இறைவன், நபிகளார் மற்றும் சில பெரியோர்களின் புகழ், மார்க்க சம்பந்தமான சில விடயங்கள், சூபித்துவ சிந்தனைகள் முதலிய விடயங்கள் பேசப்பட்டுள்ளன. இவ்விலக்கியங்களையே அறிஞர்கள் பலரும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் எனப் போற்றுகின்றனர். இஸ்லாமிய இலக்கியம் என்றால் என்ன என்ற கோட்பாட்டோடு இவ்விலக்கியங்களைப் பொருத்திப் பார்க்கும்போது, இவற்றில் அதிகமான குறைபாடுகள் காணப்படுகின்றன. இவ்விலக்கியங்களில், அல்லாஹ் கூறாத விடயங்களை அல்லாஹ் கூறினான் என்றும் நபிகளார் கூறாத விடயங்களை நபிகளார் கூறினார்கள் என்றும் கற்பனை செய்து உரைத்தல், ஏகத்துவக் கோட்பாட்டோடு முரண்படல், பிற மதக் கருத்துக்களை எடுத்துக் கொண்டு அதனை இஸ்லாம் கூறுவதாக உரைத்தல், தமிழ் இலக்கிய மரபை முற்று முழுதாக தழுவி எழுத முற்படல், உண்மையைக் காட்டிலும் கற்பனைக்கு முக்கியத்துவம் வழங்குதல், உண்மைப் பாத்திரங்களைக் கொண்டு இலக்கியங்களைப் படைக்கும் போது இலக்கிய ரசனை எனும் ஒன்றிற்காக இடையிடையே கற்பனைப் பாத்திரங்களையும் உருவாக்கல், நபிமார்கள், நபித்தோழர்களின் வரலாறுகளை இலக்கியங்களாகப் படைக்கும்போது அவற்றில் போலியான சம்பவங்களையும் இணைத்துக் கூறல், நபிகளாரின் வரலாற்றில் நடந்த சில அற்புதங்களை நபித்தோழர்களின் வரலாற்றிலும் நடந்ததாக உரைத்தல் முதலிய இன்னோரன்ன குறைபாடுகளை அடையாளப்படுத்த முடியும். இவ்வாய்வானது அல்லாஹ் கூறாத விடயங்களை அல்லாஹ் கூறினான் என்று கற்பனை செய்து பாடியுள்ள விடயங்களை அடையாளப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. இவ்விலக்கியங்களைப் படிக்கும் முஸ்லிம் அல்லாதவர்களும் இஸ்லாம் தொடர்பான பிழையான கருத்துக்களை உள்வாங்குவதற்கு இவை சாதகமான சூழலை உருவாக்குகின்றன. சமயத்தை சரியான முறையில் இஸ்லாமிய இலக்கியங்கள் பிரதிபலிக்கத் தவறி விட்டன என்பதை எடுத்துக் காட்டி, இஸ்லாமிய இலக்கியம் படைப்போருக்கான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியாகவே இவவாய்வு அமைந்துள்ளது. இராஜநாயகம், புதுகுஷ்ஷாம், சீறாப்புராணம், ஆயிரம் மஸ்அலா எனும் அதிசய புராணம், சின்னச்சீறா, திருநெறி நீதம் முதலிய நூல்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவாக அல்குர்ஆன் மற்றும் இராஜநாயகம், புதுகுஷ்ஷாம், சீறாப்புராணம், ஆயிரம் மஸ்அலா எனும் அதிசய புராணம், சின்னச்சீறா, திருநெறி நீதம் முதலிய நூல்களும் இரண்டாம் நிலைத் தரவாக இஸ்லாமிய இலக்கிய வரலாற்று நூல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொதுவாக மரபு சார்ந்த இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களை நோக்கும் போது அவற்றில் வஹி தொடர்பான கற்பனைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

**திறவுச் சொற்கள்:** இஸ்லாம், இலக்கியம், இறைசெய்தி

**அறிமுகம்:**

அல்லாஹ் உலகில் அவனது மார்க்கத்தைப் போதிப்பதற்காக ஒவ்வொரு காலகட்டத்திலும் மனிதர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்தான். அவர்களையே நபிமார்கள் என அழைப்பர். நபிமார்களில் இறுதி நபியாக வந்தவரே முஹம்மத் நபியவர்கள். அவரோடு மார்க்கத்தை அல்லாஹ் நிறைவு செய்து விட்டான். நபிமார்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வானவத் தூதர் ஜிப்ரீல் (அலை) மூலம் அல்லாஹ் தனது செய்திகளை அறிவிப்புச் செய்தான். இதனையே வஹி என்று கூறப்படுகின்றது. வஹி என்பது 'இறைச் செய்தி' என்று பொருள்படும். இந்த வஹி தொடர்பான விடயங்களில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் படைத்தோர் பல்வேறு கற்பனைகளைச் செய்து அவற்றை தமது இலக்கியங்களில் உண்மைச் செய்திகள் போல் கையாண்டுள்ளனர். அல்லாஹ் கூறாத விடயங்களை அல்லாஹ் கூறினான் என கற்பனை செய்து கூறுவதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. அது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறியுள்ளது:

> "இது ஒரு கவிஞனுடைய சொல் அன்று. எனினும் நீங்கள் வெகு சொற்பமாகவே விசுவாசிக்கின்றீர்கள். இது ஒரு குறிகாரனுடைய சொல்லும் அன்று. எனினும் வெகு சொற்பமாகவே நல்லுபதேசம் பெறுகின்றீர்கள். உலகத்தார் யாவரையும் படைத்துக் காப்பவனால் (இது) இறக்கப்பட்டுள்ளது. யாதொரு வார்த்தையை (நபியாகிய) அவர் எம்மீது கற்பனை செய்து பொய்யாகக் கூறினால் அவரை வலக்கரப்பிடியாக பிடித்துக் கொண்டு அவருடைய உயிர் நாடியை நாம் துண்டித்து விடுவோம்" [1]

இந்த அல்குர்ஆன் வசனம் அல்லாஹ் கூறாத விடயங்களை அல்லாஹ் கூறினான் என்று பொய்யுரைப்பவர்களைக் கண்டிக்குமுகமாக நபிகளாரை விளித்து இறக்கப்பட்ட வசனமாகும். எனினும் அல்குர்ஆனின் கட்டளைகளை மீறி கவிஞர்கள் தமது மனோ இச்சைப்படி வஹி தொடர்பான விடயங்களில் பல்வேறு கற்பனைகளைச் செய்திருப்பதை இலக்கியங்களினூடே காண முடியும்.

**அல்லாஹ் கஃபாவுக்கு ஆறுதல் கூறல்:**

சுலைமான் (அலை) அவர்களின் வரலாற்றைக் கூற எழுந்த நூலே இராஜநாயகம் ஆகும். இதனை வண்ணக்களஞ்சியப் புலவர் எழுதியுள்ளார். இவ்விலக்கியத்திலும் இஸ்லாத்திற்கு மாற்றமான பல்வேறு கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதில் இடம்பெறும் 'கஃபதுல்லாவில் குர்பான் கொடுத்த படலத்'தில், சுலைமான் நபி கஃபாவிற்கு மேலால் தமது காற்று வாகனத்தில் கடந்து சென்றபோது கஃபா அழுது அல்லாஹ்விடம் முறையிட்டதாக எழுதப்பட்டுள்ளது.

"அத்தலத் திழிந்தங் கிருந்தன ரிதன்மே
லமரர்கள் கரத்தினா லியற்ற
வெத்தலத் தினிலும் வியனுற விளங்கி
யிலங்கொளிக் கதிர்மதி யிருபா
னித்தநித் தமுஞ்சாய்ந் தோடமே லவர்க
டவமெலா நிறைவுற வுலக
மத்திமத் துதித்த கருபதுல் லாதன்
வாய்திறந் தழுதது வன்றே
அளவற வுருகி அலறிய தொனியோ
டழுதலு மேனழு தனையென்
றுளமறி யிறைவன் கேட்பவின் டுரைக்கு
முன்னபி களிலொரு வோர்த்தந்
தளமுட ளெனது சிகரத்தின் மீது
தாவியே பறந்துசெல் கின்றார்
தெளிவினென் னிடத்தி லிழிந்திவ ருன்னைத்
தொழுதிலர் திக்றுசெய் திலரே" [2]

அதாவது, அல்லாஹ் கஃபதுல்லாவிடம் ஏன் அழுகின்றாய் எனக் கேட்டதாகவும் அதற்கு கஃபதுல்லா, இத்தலத்தில் வந்து இறங்கி உன்னை வணங்காது தனக்கு மேலால்

---

[1] அல்குர்ஆன் : அல்ஹாக்கா : 41 - 46

[2] வண்ணக் களஞ்சியப் புலவர், (1977), இராஜநாயகம் : குறுபான் கொடுத்த படலம் : 2, ப. 151

நபியொருவர் பறந்து செல்கிறார், அதனால் அழுதேன் எனக் கூறியதாக சித்திரித்துள்ளார். இது மட்டுமன்றி, என்னைச் சூழ கற்சிலைகளை வைத்துக் கொண்டு வணங்குகின்றனர். அதனால் அழுதேன் எனவும் க.்.பதுல்லா அல்லாஹ்விடம் கூற, அல்லாஹ் க.்.பதுல்லாவிற்கு பின்வருமாறு ஆறுதல் கூறுவதாக ஆசிரியர் எழுதியுள்ளார்:

''துறவின ருயிரே பின்னைநா ளுன்னைச்
சுஜூதிடு நெற்றிகள் கொண்டு
நிறைவு செய்தருள்வே னென்றிரு வொளியாய்
நித்தில மாமயில் வடிவாய்ப்
பொறைதரு நபிக ளெவர்க்குநா யகமாய்ப்
புண்ணியப் பொருளினுட் பொருளா
யறைதரு கபீபு முஹம்மது நபியை
யனுப்புவ னுனதுபா லதனில்
இருகதிக் குறுவா னதையுமுன் னிடமே
யிறக்குவ னுனைபரி பாலித்
தருளவும் வணங்கித் துதிக்கவு மிகுந்தோர்....

பறவை போற் பிள்ளையைத் தேடி
வருமனை யினைப்போ லெனதுகல் குகளுன்
மாட்டினில் வருகவும் புரிவேன்'' [3]

மேலும், க.்.பா அழுத செய்தியினை சுலைமான் நபியவர்களுக்கும் அல்லாஹ் எடுத்துக் கூறினான் என பின்வரும் பாடலில் கூறப்பட்டுள்ளது:

''அழுங்கியுட் கவலை நிறைதரக் க.்.பா
வழுதது சுலைமா னபிக்குந்
செழுந்தவப் பொருளா முதலானறியச்
செய்தனன்.......'' [4]

அல்லாஹ் சுலைமான் நபியிடம் கூற, சுலைமான் நபியவர்கள் தமது படைகளோடு எழுந்து, அவருடைய காற்று வாகனத்தில் ஏறி க.்.பதுல்லாவை சென்றடைந்தார். அங்கு காணப்பட்ட சிலைகளை உடைத்தெறிந்து, அங்கு இறைவனை வணங்கி, குர்பான் கொடுத்து ஏழைகளின் துயரைத் துடைத்தார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. சுலைமான் நபியவர்களுக்கு அல்லாஹ் காற்றை வசப்படுத்திக் கொடுத்திருந்தான். அதேவேளை, ஜின்களையும் வசப்படுத்திக் கொடுத்திருந்தான். விலங்குகள் பறவையினங்களின் மொழியை அறியும் ஆற்றலையும் கொடுத்திருந்தான். பெரும் ஆட்சியதிகாரத்தையும் கொடுத்திருந்தான். அவரது இறுதிக்காலத்தில் அவர் பைத்துல் முகத்தஸை ஜின்களை வைத்து புணருத்தாரனம் செய்ததாகவும் வரலாறு கூறுகின்றது. அவர்கள் தேவையான இடங்களுக்கு தமது காற்று வாகனத்தில் தம் படைகளோடு சென்று வந்தார்கள். ஆனால் அவர் க.்.பதுல்லாவிற்கு மேலால் பறக்க முற்பட்டு க.்.பதுல்லா அழுதது, அதற்கு அல்லாஹ் ஆறுதல் கூறியது, சுலைமான் நபிக்கு இவற்றை அல்லாஹ் வஹியாக அறிவித்தது முதலான சம்பவங்கள் ஆசிரியரின் கற்பனையே. இதனை படிப்போர், சுவாரஷ்யமான ஒரு கதையாக இதைப் படித்தாலும் புனித ஆலயமான க.்.பதுல்லாவை சிறப்பிப்பதற்காக ஆசிரியர் இவ்வாறானதொரு கற்பனையை இதில் சேர்த்திருந்தாரும் அல்லாஹ் கூறாத விடயங்களை அல்லாஹ் கூறினான் என ஆசிரியர் இங்கு கூறியிருக்கும் விடயம் இஸ்லாமிய நோக்கில் பாரதூரமான ஒரு விடயமாகும்.

**யுத்தத்தின்போது உருத்தோற்றம் இன்றி அசரீரி கேட்டல்:**
உமர் (றழி) அவர்களது காலத்தில் இடம்பெற்ற யுத்தமொன்றில் காலிது அவர்கள் போரில் இக்கட்டான நிலையுடன் இருப்பதைக் கண்ட படைவீரர்கள் மனமிரங்கிய வேளை, ''ஓதும் குர்ஆன் சுமந்து அருளின் மிக்க றகுமான் தனையே வணங்கும் நீதமுடையீர், உங்களுக்கு உதவி நிறைந்த மகிழ்ச்சி வந்து விட்டது'' என்று உருத்தோற்றம் இன்றியே அசரீரி கேட்டது எனவும் அதனைக் கேட்ட வீரர்களின் உள்ளத்துக்கு உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது

[3] வண்ணக் களஞ்சியப் புலவர், (1977), மு.கு.நூ, ப. 152
[4] மேலது, ப. 152

எனவும் புதுகுஷ்ஷாம் 'கன்சரீன் கொண்ட படலத்'தில் புலவர் கூறியுள்ளார். ஆசிரியர் கூறும் இந்த அசரீரி என்பதன் அர்த்தம், அல்லாஹ்விடமிருந்து வந்த வார்த்தைகள் என்பதே. புதுக்குஷ்ஷாமில் இடம்பெறும் பின்வரும் பாடல் இதற்கு சான்று பகர்கின்றது:

''ஓதுங் குறுஆன் சுமந்தளியி னோங்கும் றகுமான் றனைவணங்கு
நீத முடையீர் நுமக்குதவி நிறைந்த மகிழ்ச்சி யடைந்ததெனப்
போத வொலித்த தசரீரிப் புந்தி களிகொண் டணிசேனை
மோதி நரசிங் கேற்றினம்போன் முருக்கு மமரே செருக்குவரால்.'' [5]

மேலும், பகுலபக் நகரில் இரு சேனைகளுக்குமிடையில் கடும்போர் நிகழ்ந்து கொண்டிருக்கையில் ''மறைவில் தெளிவு கொண்டவர்களே! பகையைத் தகர்க்கும் கருணையாளனாகிய அல்லாஹ்விடமிருந்து உங்களுக்கு மகிழ்ச்சி எய்திற்று. சிறந்த உதவி பெற்றுக் கொண்டீர்கள்'' என்று உருத் தோற்றமின்றி ஒரு சப்தம் கேட்டது எனவும் ஆசிரியர் பின்வரும் பாடலில் சித்திரித்துள்ளார்:

''இரண்டுசேனை தலைமயங்கி யினன்கடீய வமரினாற்
றிருண்டு கொண்ட வேலை மறையிற் றெளிவுகொள்ளு மெழிலுளீர்
முரண்ட கர்க்குங் கருணையாளன் முன்னின் மகிழ்விங் கெய்திற்றாற்
றெருண்டவுதவி கொண்டீரென்றோ ரோதைசேணி னார்த்ததே.'' [6]

பகுலபக் நகரில் இரு படைகளுக்குமிடையில் யுத்தம் நடைபெற்ற வேளை ஒரு அசரீரி கேட்டதன் பின்னர் முஸ்லிம்களுக்கு ஒத்தாசையாகப் பச்சை நிறக் கோலத்துடன் பஞ்ச கல்யாணிக் குதிரைகளில் மலக்குகளின் படையணி அல்லாஹ்வால் அனுப்பப்பட்டது என புதுக்குஷ்ஷாம் பாறூக்கிய்யா காண்ட 'பகுலபக் கொண்ட படலத்'தின் மற்றுமொரு பாடலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

''பசிய மோலி ககனளாவப் பஞ்சவெள்ளை மாக்களிற்
பசிய வங்கி திசையளாவப் பசியகேத னங்களும்
பசிய சோதி காலவென்றிப் படைகளேந்தி யுலகிடை
நிசியடாது விபுதர்சூழ நின்றுவாழி கூறினார்.'' [7]

இம்மூன்று பாடல்களிலும் கூறப்பட்டுள்ள சம்பவம் உமர் (றழி) அவர்களது ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஒரு யுத்தத்தில் நடைபெற்ற சம்பவம் எனக் கூறப்பட்டுள்ளது. நபிகளாருக்கு அல்லாஹ்வுடைய வஹி பல வடிவங்களில் வந்தது. அதில் ஒன்று இவ்வாறான ஒலி வடிவில் வருவதாகும். மற்றும் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நேரில் வந்தும் நபிகளாருக்கு கனவு வடிவிலும் என பலவாறு இறைத்தூது அருளப்பட்டது. நபிகளாரோடு வஹி நின்று விட்டது. காரணம் இஸ்லாம் மார்க்கம் பூரணப்படுத்தப்பட்டு விட்டது. அதனால், நபிகளாரின் காலத்திற்குப் பின் யாருக்கும் வஹி வரவில்லை. நபிகளார் செய்த போரான பத்ருப் போரில் இடம்பெற்ற சில அதிசயங்களை ஆசிரியர் நபித் தோழர்களின் காலத்தில் நடைபெற்ற யுத்தங்களிலும் இடம்பெற்றது என கற்பனை செய்தே இவ்வாறான செய்திகளை எழுதியுள்ளார்.

**உருவமற்றுப் பிறந்த மகவை பெண்ணுருவமைத்தல்:**

மேலும், ஹபீப் அரசனும் நபிகளாரும் சந்தோசமாகக் கதைத்துக் கொண்டிருந்தவேளை, ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபிகளாரிடம் வந்து அவர்களுக்குச் ஸலாம் கூறி, ஹபீப் அரசனது தசைக்கட்டி போல் உருவமற்றுப் பிறந்த மகவை கொண்டு வரச்சொல்லி, கஃபதுல்லாவிற்குச் சென்று உரோமங்களாலான ஒரு போர்வையை எடுத்து அதனை மூடி, ஸம்ஸம் கிணற்று நீரை உமது கைகளால் எடுத்து அதன்மீது தெளித்து, அல்லாஹ்விடம் பிரார்த்திப்பீராக. அவ்வாறு செய்தால் அதன் உருவம் உண்டாகிவிடும் என்று கூறி விண்ணுலகத்திற்குச் சென்றார் என சீறாப்புராணத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

---

[5] ஷரீபுத்தீன், ஆ.மு. (உரையாசிரியர்), (1979), புதுகுஷ்ஷாம் : மூன்றாங் காண்டம் பாறூக்கிய்யா : மூலமும் உரையும் : கன்சரீன் கொண்ட படலம் : 129, ப. 237

[6] ஷரீபுத்தீன், ஆ.மு. (உரையாசிரியர்), (1979), மு.கு.நூ, பகுலபக் கொண்ட படலம் : 74, ப. 281

[7] ஷரீபுத்தீன், ஆ.மு. (உரையாசிரியர்), (1979), மு.கு.நூ, பகுலபக் கொண்ட படலம் : 83, ப. 284

"இறைவனை நோக்கித் துவாவிரந் தினிரே
        லிலங்குருத் தோன்றுமென் றிசைத்துச்
சிறைநிறந் தோன்றா தமருல கதனிற்
        செபுறயீ லேகிய பின்னர்
கறைநிறங் குலவுஞ் செழுங்கதிர் வடிவேற்
        கரதல முகம்மது நயினா
ரறைமுர சதிரத் திமஸ்கிறை யவனு
        மெழுந்தன ரரியக.·. பாவில்." [8]

அதன்படி அந்தத் தசைக்கட்டியைக் கொண்டு வரும்படி நபிகளார் கட்டளையிட அதனைக் கொண்டுவந்தபோது ஜிப்ரீல் (அலை) அவர்கள் கூறியதுபோல நபிகளார் செய்தார்கள். அப்போது அத்தசைக்கட்டி அழகிய பெண் உருவம் பெற்றுக் கலிமாவும் மொழிந்தது என ஆசிரியர் கூறியுள்ளார். அதேவேளை, நபிகளார் அல்லாஹ்விடம் பிரார்த்திக்க அந்தத் தசைக்கட்டியை அல்லாஹ் க.·.பதுல்லாஹ்வில் வைத்து உயிர் கொடுத்து உருவமும் கொடுத்தான் எனவும் ஆசிரியர் கூறியுள்ளார்.

"பூதலத் தெவர்க்கு மறைநெறி புதுக்கிப்
        பொருவருஞ் சுவனநா டளிப்பத்
தூதென வுதித்த முகம்மதின் துவாவைத்
        துய்யவ னுறக்கபூ லாக்கப்
பாதகக் குபிரர் மனம்பதை பதைப்பப்
        பலன்படாப் பெருந்தசைத் திரட்சித்
தீதறத் தோன்று மவயவஞ் சிறப்பத்
        தெரிவையின் றிருவுரு வெடுத்த." [9]

என வரும் பாடல் இதனை உணர்த்துகின்றது. இதனைத் தொடர்ந்து இவ்வாறு உருவாகிய பெண்ணின் உருவத்தைக் கேசாதி பாதமாக ஆசிரியர் வர்ணித்துள்ளார். இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றதற்கு இஸ்லாமிய வரலாற்றில் ஆதாரங்கள் இல்லை. ஆனால், இந்தக் காப்பியத்தில் வரும் பெண் பாத்திரங்களாக நபிகளாரின் மனைவியரும் மகள் பாத்திமாவும் இடம்பெறுவதால் அவர்களைக் கேசாதி பாதமாக வர்ணிக்க முடியாது. அக்குறையை நிவர்த்தி செய்வதற்காக ஆசிரியர் இவ்வாறானதொரு கற்பனையைச் செய்துள்ளார். இக்கதைப் பகுதியில் ஜிப்ரீல் (அலை) வஹி மூலம் அல்லாஹ் கூறாத செய்தியைக் கூறினார் என பொய்யுரைக்கப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றதற்கு எவ்விதமான ஆதாரங்களும் இல்லை.

**முஆதின் மரணச் சடங்கை நடத்துமாறு ஜிப்ரீல் (அலை) கட்டளையிடல்:**

முஆவியா என்பவரின் மகன் முஆத் என்பவர் மரணமானார். அவருடைய மரணச் சடங்கை நடத்துமாறு ஜிப்ரீல் (அலை) மூலம் நபிகளாருக்கு இறைவன் கட்டளையிட்டான். இவ்வாறு தொழுகை நடத்தப்பட்டமை தொடர்பில் நபிகளார் ஜிப்ரீல் (அலை) அவர்களை வினவ, அவர் வழக்கமாக சூரா இஹ்லாஸை ஓதிவந்தவர் என ஜிப்ரீல் (அலை) கூறுவதாக சின்னச்சீறா கூறுகிறது. அதேவேளை, அவரது மையித்துத் தொழுகையில் ஜிப்ரீல் (அலை) உட்பட மலக்குமார் மற்றும் பெரும் பெரும் நபித் தோழர்கள் அனைவரும் அணிஅணியாக நிற்க நபிகளார் அவர்களுக்கு தலைவராக இருந்து தொழுகையை நடாத்தினார்கள் எனவும் சின்ன சீறா என்று வழங்கும் சீறாப்புராணத்தின் பின்வரும் பாடல்களில் கூறப்பட்டுள்ளது:

"…..கொற்றவன் இமாமாய் உம்மை
ஈண்டுநின் றிறைஞ்சக் கற்பித் தான்என இமையோர்க் கெல்லாம்
சேண்தனில் அரசராய்வாய்ந்த ஜிப்ரயீல் உரைத்தார் பின்னர்
……..      ……………
ஏதம்ஒன் றில்லான் தூய இல்லெனும் க.·.பா நோக்கி

---

[8] செய்குத்தம்பிப் பாவலர், கே.பி., (உரையாசிரியர்), (1999), சீறாப்புராணம் மூலமும் பொழிப்புரையும் இரண்டாம் பாகம் : தசைக்கட்டியை பெண்ணுருவமைத்த படலம் : 8, ப. 725

[9] செய்குத்தம்பிப் பாவலர், கே.பி., (உரையாசிரியர்), (1999), மு.கு.நூ, தசைக்கட்டியை பெண்ணுருவமைத்த படலம்: 15, ப. 729

ஆதரத் துடனே மையத் ததைத்தொழு விக்க வென்றார்.

இமையவர்க் கிறையும் ஏனை யோர்களும் தீனில் நேருற்
றமையுமே லோர்கள் தாமும் அணிஅணி யாயப்பின் நிற்பக்
கமைமறை பழகும் செந்நாக் கபீபிமா மாக முன்நின்
றுமிழ்முஆ பியத்தை வேதம் ஓதியே தொழுவித் தாரால்
நறைமலர்க் கரங்கள் ஏந்தி நபிதுஆச் செய்து வாரித்
தறையினில் இவரக்கிப் பேறு தரித்ததென் என்ன உம்பர்க்
கிறையுடன் வினவக் குல்கு வல்லாகு எனும்சூ றத்தை
மும்முறை நிதமும் ஓதி முடித்திடும் பேறீ தென்றார்'' [10]

இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றதற்கான சரியான ஆதாரங்கள் அல்குர்ஆனிலோ ஹதீஸ்களிலோ இடம்பெறவில்லை. சூறா இஹ்லாஸை ஓதினால் அல்குர்ஆனில் மூன்றில் ஒரு பகுதியை ஓதியதற்குச் சமமாகும் என ஒரு ஹதீஸ், புகாரி முதலிய ஹதீஸ் கிரந்தங்களில் பதிவாகியுள்ளது. அந்த சூறா அதாவது, அத்தியாயம், ஏகத்துவத்தை வலியுறுத்தும் அத்தியாயமாகும். அல்குர்ஆன் கூறும் ஏகத்துவத்தை அந்த ஒரு சூறாவின் மூலமே உணர முடியும் என்பதனாலேயே அதனை ஓதினால் அல்குர்ஆனில் மூன்றில் ஒரு பகுதியை ஓதியதற்குச் சமமாகும் எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறான கருத்தை சிறப்பித்துக் கூறுவதற்காக ஆசிரியர் இவ்வாறானதொரு கதையை உருவாக்கி இருக்கலாம். அல்லது சில நூல்களில் குறிப்பாக அன்றாடம் ஓதவேண்டிய சூறாக்கள் என அல்குர்ஆனில் இருந்து சில அத்தியாயங்களை எடுத்து நூல் வடிவில் பதிப்பித்துள்ளார்கள். அவற்றை ஓதினால் இன்னின்ன பயனை அடைய முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இது அல்குர்ஆனை முழுமையாக ஓதுவதிலிருந்தும் கற்பதிலிருந்தும் மக்களை திசைதிருப்புவதற்காக செய்யப்பட்ட ஒரு சதித்திட்டமாகும். இந்நூல் எழுதப்பட்ட காலப்பகுதிகளில் குறிப்பிட்ட அல்குர்ஆன் அத்தியாயங்களுக்கு மாத்திரம் அழுத்தம் கொடுக்கும் போக்கு அதிகமாக இருந்த ஒரு காலகட்டமாகும். அதேவேளை அதிகமான கற்பனைக் கதைகளும் நிலவிய காலமாகும். இவ்வனைத்துக் காரணங்களும் தாக்கம் செலுத்தியே இவ்வாறானதொரு கற்பனைக் கதை உருவாகியிருக்க வேண்டும். இதில் குறிப்பிடப்படும் முஆவியா என்பவர் அபூசுப்யானின் மகனாக இருந்தால் அவருக்கு யஸீத் மாத்திரமே மகனாகவும் ஏனைய பிள்ளைகள் பெண்பிள்ளைகளாகவுமே காணப்பட்டனர்.

**இப்னு ஸலாமும் எழுநூறு யூதர்களும் இஸ்லாத்தை ஏற்றல்:**

மேலும், ஆயிரம் மஸ்அலா எனும் அதிசய புராணத்திலும் நபிகளாரின் மதீனா வாழ்க்கை காட்டப்பட்டு, இப்னு ஸலாம் என்பவனும் எழுநூறு யூதர்களும் நபிகளாரிடம் வந்து ஆயிரம் கேள்விகளைக் கேட்பார்கள் என நபிகளாரிடம் ஜிப்ரீல் (அலை) அவர்கள் வஹி அறிவித்ததாகவும் பின்னர் இப்னு ஸலாமும் அவனது எழுநூறு யூதர்களும் நபிகளாரிடம் வந்து கேள்விகள் கேட்பதற்காக அமர்ந்த வேளையில் அங்கு இஸ்ராஈல் (அலை), ஜிப்ரீல் (அலை), மீக்காஈல் (அலை) ஆகியோரும் வந்து அமர்ந்திருந்தனர் என்றும் அவ்வேளை, இப்னு ஸலாம் நபிகளாரிடம் ஒவ்வொரு கேள்வியாகக் கேட்க, நபிகளார் அவற்றிற்குப் பதில் கூறியதாகவும் பின்னர் இப்னு ஸலாமும் அவரது எழுநூறு யூதர்களும் அவ்விடத்திலேயே இஸ்லாத்தை ஏற்றதாகவும் இந்நூல் கூறுகின்றது. இதில் இறைவனின் வஹி தொடர்பான விடயத்தில் புலவர் தமது மனோ இச்சைப்படி செயற்பட்டுள்ளார். அல்லாஹ் கூறும் விடயத்தைத்தான் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபிகளாரிடம் கூறுவார்கள். அல்லாஹ் கூறாத விடயங்களை புலவர் கற்பனை செய்துவிட்டு அல்லாஹ் கூறியதாக எழுதியுள்ளார். அதேவேளை, வானவர்கள் மக்களோடு அமர்ந்திருந்து கேள்வி - பதில் அரங்குகளில் பங்குபற்றியதற்கும் எவ்வித ஆதாரமும் இல்லை. அதேவேளை, இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்றதற்கும் எவ்வித ஆதாரமும் இஸ்லாமிய வரலாற்றில் இல்லை. அனைத்தும் புலவரின் கற்பனையே. ஆசிரியர், நபிகளாரின் பொன்மொழிகள் சிலவற்றை எடுத்து அதனை கேள்வி பதில் அமைப்பில் செய்யுள் நடையில் எழுதிவிட்டு அதற்கு ஒரு கதையை கற்பனையாகப் புனைந்துள்ளார்.

**நபிகளாரின் பிறப்பை சிறப்பித்தல்:**

மேலும், சீறாப்புராணத்தில் நபிகளாரின் பிறப்பைப் பற்றிக் கூறும்போது,

---

[10] பனீ-அகமது மரைக்காயர், (1990), சின்ன சீறா என்று வழங்கும் சீறாப்புராணம்: தபூக்குப்படலம் : 72 - 75, ப. 206

"செவ்விவீற் றிருந்து முகமதி யிலங்குந்
திருந்திழை ஆசியா தமையு
மவ்வலங் குழலார் மறியமென் றுரைக்கு
மயிலையு மரம்பையர் தமையுங்
கவ்வையங் கடல்சூழ் புடவியிற் சிறந்த
காட்சி சேர் மக்கமா நகரி
னவ்விவேல் விழியா ராமினா விருக்கு
நறைமனை புகவிறை யுரைத்தான்." [11]

என கூறப்பட்டுள்ளது. அதாவது, அல்லாஹுத்தஆலா மரியம் (அலை) அவர்களையும் ஆசியா நாயகி அவர்களையும் ஆமினாவின் வீட்டிற்குள் செல்லும்படி கட்டளையிட அவர்கள் இருவரும் சுவர்க்கத்தின் மகிமையுடைய அரம்பையவர்கள் சூழ பூரண சந்திரன்கள் இரண்டு நட்சத்திரங்களோடு கூடி இப்பூவுலகின் கண் தமது பாதசரங்கள் ஒலிக்கும் படியாக மக்கமா நகரில் வந்து இறங்கி தெய்வீகத் தன்மை பொருந்திய ஆமினாவின் வீட்டிற்குள் பிரவேசித்தனர். பூமி முழுவதும் புகழ்ந்து பேசப்படும் ஆமினா அவர்களின் வலது பக்கத்தில் ஆசியா நாயகியும் இடது பக்கத்தில் மரியம் (அலை) அவர்களும் நெருங்கி வந்த நேரத்தில் தெய்வப் பெண்களில் சிலர் வந்து ஆமினா அவர்களின் முழங்கால்களையும் கணைக்கால்களையும் பாதங்களையும் தடவினர். அவ்வேளை ஆமினா தேவ பானத்தைக் குடித்த மாத்திரத்திலேயே ஒரு பேரொளியானது வானத்தில் இருந்து இறங்கி வந்து சூரியனது கிரகணங்களைப் போல தனது கிரகணங்களைப் பரவச் செய்யவும் அங்கிருந்த ஹுர்லின் பெண்கள் பிரசவ வைத்தியம் செய்யவும் ஆசியா நாயகியும் மரியம் (அலை) அவர்களும் ஆமினாவை அணைத்து 'நீ அஞ்சாதே' என்று கூற கர்ப்பம் நிகழ்ந்தது எனவும் ஆசிரியர் பலவாறாகக் கற்பனை செய்து கூறியுள்ளார். நபிகளாரின் பிறப்பை சிறப்பிப்பதற்காகவே தேவலோகப் பெண்களும் மரணித்தவர்களான மரியம் (அலை), ஆசியா நாயகி ஆகியோரும் ஆமினாவின் பிரசவத்திற்கு உதவிக்காக அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று பூமிக்கு வந்தனர் எனக் கூறப்பட்டுள்ளது. இஸ்லாமிய வரலாற்றில் இவ்வாறு இடம்பெற்றதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

அதேவேளை 107ஆவது பாடலில் க.:.பதுல்லா நபிகளார் பிறந்ததையிட்டு மக்களின் காதுகளுக்குக் கேட்கும் வகையில் வாயைத் திறந்து பேசுவதுபோல இறைவன் இன்றைய தினம் என்னைப் பூரணப்பட பரிசுத்தமாக்கி வைத்தான் எனக் கூறியதாகவும் ஒரு கற்பனைப் புனைவை உமறுப்புலவர் ஏற்படுத்தியுள்ளார். க.:.பதுல்லாஹ் அது கட்டப்பட்ட காலம் முதலே புனிதமான இடமாகவே கருதப்பட்டது. நபிகளாரையும் அப்துல் முத்தலிப் அவர்கள் க.:.பாவிற்கு எடுத்துச் சென்று க.:.பாவைச் சுற்றி வலம் வந்துவிட்டுக் குழந்தையை ஆமினாவிடம் கொடுத்ததாக வரலாறு கூறுகின்றது. உமறுப் புலவர் நபிகளாரை அவர் பிறந்த செய்தி அறிந்ததும்
அவரின் பாட்டனாரான அப்துல் முத்தலிப் தம்மிடம் குழந்தையைத் தருமாறு கூற, ஆமினாவோ வானவர் கோன் ஜிப்ரீல் (அலை) அவர்கள் தம்மிடம் வந்து, மூன்று தினங்கள் முடியும்வரை குழந்தையை யாரிடமும் கொடுக்க வேண்டாம் எனக் கூறியதாகக் கூற, அப்துல் முத்தலிப் கோபப்பட உடனே ஆமினா அவரிடம் நீங்களே உள்ளே சென்று குழந்தையை எடுங்கள் என்று கூறுகிறார். அது கேட்ட அப்துல் முத்தலிப் மிகவும் மகிழ்ச்சியடைந்து உள்ளே பிரவேசிக்க முற்படும்போது உள்ளே இருந்த வானவர் ஒருவர் தமது உடைவாளை உருவியவாறு அப்துல் முத்தலிபை உள்ளே செல்ல விடாமல் தடுத்தார்கள். அதுகண்ட அப்துல் முத்தலிப் அச்சமுற்று மனதில் கோபங் கொண்டவராய் உள்ளே இருந்தவர் மலக்குகளில் ஒருவர் என்பதை அறியாது, இவ்விடயத்தை குடும்பத்தாருடன் கதைத்து இவ்வாறு உள்ளே நின்றவரை வெளியேற்ற வேண்டும் என நினைத்தவாறு தம் வீட்டை நோக்கி நடந்தார். அப்போது அவரது உள்ளத்தில் நினைத்ததைச் சொல்ல முடியாமல் அவரது சிந்தனை மாறி, நாவும் செயலிழந்து ஏழு தினங்கள் நோயுற்று படுக்கையில் இருந்தார். பின்னர் குணமடைந்ததும் தமது பேரனைப் பார்ப்பதற்காக மீண்டும் ஆமினாவின் வீட்டுக்கு வந்து மகிழ்ச்சியோடு தம் பேரனை எடுத்துக்கொண்டு க.:.பாவிற்குச் செல்வதாக ஆசிரியர் 110 – 123ஆவது பாடல் வரையான பகுதியில் விவரித்துள்ளார். இப்பகுதியில் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபிகளாரை யாரிடமும் மூன்று தினங்கள் வரை கொடுக்க வேண்டாம் என்று கூறியதை மெய்ப்படுத்தவே அப்துல்

[11]செய்குத்தம்பிப் பாவலர், கே.பி., (உரையாசிரியர்), (1999), மு.கு.நூ, நபியவதாரப் படலம் : 81, ப. 109

முத்தலிப் அவர்கள் குழந்தையைக் கேட்டது, ஆமினா மறுத்தது, வானவர் அப்துல் முத்தலிபை எதிர்த்தமை, அவர் நோயுற்றமை அனைத்தையும் கற்பனையாகப் புனைவதற்குக் காரணமாக அமைந்துள்ளது. ஜிப்ரீல் (அலை) அவர்கள் இறைவனின் கட்டளையை நபிமார்களுக்கு எடுத்துக் கூறக்கூடியவர். ஆமினா அவர்களுக்கு அல்லாஹ்விடம் இருந்து மூன்று தினங்கள் வரை யாரிடமும் குழந்தையைக் கொடுக்க வேண்டாம் என வஹி (இறைத்தூது) வந்ததாக ஆசிரியர் கற்பனை செய்து இதில் கூறியுள்ளார். இதுவும் இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெறாத ஒரு விடயமாகும்.

மேலும், நபிகளார் பிறந்தபோது அல்லாஹ் ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு பின்வருமாறு கட்டளையிட்டதாக உமறுப்புலவர் சீறாப்புராணத்தில் கூறியுள்ளார்:

“சிறந்தநன் மதலை தனைவிரைந் தெடுப்பத்
        தெரிவையர் மனத்தினி னினைப்ப
மறந்திகழ் விழியார் தொடத்தகா தென்றன்
        முகம்மதை விரைவினி லேந்தி
நிறந்திகழ் சுவனப் பதியினிற் கொடுவம்
        மென்றன னெடியவ னதனா
லறந்திக ழாமி னாதிரு மனைபுக்
        கடுத்தவர் பிள்ளையை யெடுத்தார்.”

அமரருக் கிறைவன் சபுறயீல் வரிசை
        யகுமதை யெடுத்தினி தேந்தித்
தமருடன் சுவனப் பதியினிற் கொடுபோய்ச்
        சலநதி தொறுமுழு காட்டி
யிமைதிறந் திருகண் மையினை யெழுதி
        யெண்ணெயிட் டமிர்தமு மூட்டிச்
சுமைதர வாசந் திகழ்த்தியெண் டிசையுஞ்
        சுற்றியே சிலமொழி பகர்வார்.” [12]

எனும் பாடலில் அல்லாஹ், ஜிப்ரீல் (அலை) அவர்களை விளித்து, “எனது முஹம்மதை முதலில் தீண்டுவதற்கு பெண்கள் தகுதியற்றவர்கள். அதனால் விரைவாகச் சென்று அவரை உமது கைகளில் தாங்கி சுவர்க்கத்தின் கண் கொண்டு வருக” என மொழிந்தான். அவ்வேளை, ஜிப்ரீல் (அலை) உடனே ஆமினாவின் வீட்டுக்கு வந்து குழந்தையான முஹம்மத் நபி அவர்களைத் தமது கைகளில் தூக்கி எடுத்துக்கொண்டு வானவர்களோடு சுவர்க்கத்தை அடைந்தார்கள். அங்கு காணப்படும் நீரோடைகளில் அவர்களைக் குளிப்பாட்டி, தலைக்கு எண்ணெய் தேய்த்து, கண்களில் சுருமா இட்டு தேவாமிர்தத்தை உண்பித்தார்கள். அதேவேளை, எட்டுத் திக்குகளுக்கும் அவரைத் தூக்கிச் சென்று பல்வேறு சொற்களையும் சொல்லிக் கொடுத்தார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. அதன் பின்னர் மீண்டும் ஆமினாவிடம் பிள்ளையைக் கொண்டுவந்து கொடுத்தார் எனக் கூறப்பட்டுள்ளது. இதில் ஆசிரியரின் கற்பனை எல்லை மீறிச் சென்றிருப்பதை அவதானிக்க முடியும். நபிகளாரைச் சிறப்பிக்க வேண்டும் என்பதற்காக ஆசிரியர் இவ்வாறானதொரு கற்பனையைச் செய்திருக்க வேண்டும்.

மேலும், சீறாப்புராணத்தில் கூறப்பட்டிருப்பது போல் நபி (ஸல்) அவர்கள் பிறந்தவுடன் அல்லாஹ்வின் கட்டளைப்படி வானுலகம் எடுத்துச் செல்லப்பட்டார்கள் எனவும் அங்கு பல்வேறு அதிசயங்கள் காட்டப்பட்டன போன்ற விடயங்கள் திருமக்காப்பள்ளில் பின்வருமாறு வர்ணிக்கப்பட்டுள்ளன:

“மிகவும் புகழொடு விளங்கிடு நாயன்
சிகரான ஜிபுரியீல் சேர்ந்த மலக்குகள்
தூதர்கள் தமக்குச் சொல்லிய னுப்பவே
நாத கீதத்துடன் நடத்துவிங் கிதமாய்
பெண்கள் கூறானிகள் பிரியமாய் மகிழ்ந்து

[12] செய்குத்தம்பிப் பாவலர், கே.பி., (உரையாசிரியர்), (1999), மு.கு.நூ, நபியவதாரப் படலம் : 97 - 98, பக். 116-117

தங்கத் தினாலே தட்டுக ளேந்தி
ஒப்பி லாப்பொன் னூஞ்சல் தனிலே
முப்பொரு ளான முகம்மது நபியைத்
தூக்கி மேல்வைத்துச் சுமந்தெல் லோருமே
ஆக்கிர மாக அல்லாமுன் வைத்தார்
கண்டதோர் நாயன் கண்காட்சி தன்னை
மண்டலங் காக்கவும் வாக்குக் கொடுத்து
அங்குள சுவர்க்கத் ததிசயங் காட்டி
எங்குந் தீனாக இறக்கினன் மக்கா'' [13]

இவ்வாறு இடம்பெற்றதற்கு அல்குர்ஆனிலோ, ஹதீஸ்களிலோ, இஸ்லாமிய வரலாற்று நூல்களிலோ எவ்வித ஆதாரமும் இல்லை.

சுலைமான் நபியவர்கள் அல்லாஹ்வின் படைப்புக்கள் அனைத்திற்கும் உணவளிக்கும் பாக்கியத்தை அல்லாஹ்விடம் கேட்டதாகவும் அல்லாஹ் மறுக்க, ஒரு வருடத்திற்காவது உணவளிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறு வேண்டியதாகவும் அதனையும் மறுக்க ஒரு மாதத்திற்கு, ஒரு நாளைக்கு எனக் கேட்டதையும் அல்லாஹ் மறுக்கிறான். பின்னர் ஒரு பொழுதாவது உணவளிக்க சந்தர்ப்பத்தைத் தந்தால் நான் மகிழ்ச்சியடைவேன் எனக்கூற, அதனை அல்லாஹ் ஏற்றுக் கொண்டு அதற்குரிய உணவுகளை சேகரிக்கும்படி கூறியதாக ஆசிரியர், 'படியளந்தேலாப் படலத்'தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

''இத்திறம் இசைத்தலும் ஏக நாயகன்
சமத்துவம் உமக்கில்லை எனத்த டுத்தனன்
அத்தகை யென்னிலோ ராட்டைக் காயினு
நித்தமு முதவுவ னெனநி கழ்த்தினார்''
……… ……… ……………. ………….
….சுவையுண வொருபகற் கேனுந் துய்க்கவீந்
தெவையையு மகிழ்ச்சிசெய் திடுவ னென்றனர்''
……….. ………… ………….. ………..
வேய்ந்தவெத் திசைதொறும் வேண்டு மட்டுநீர்
வாய்ந்தசே கரஞ்செயு மெனவ குத்தனன்'' [14]

இதற்கான ஆதாரங்கள் எவையும் அல்குர்ஆனில் இல்லை. செவிவழிச் செய்திகளை வைத்து எவ்வித ஆதாரமும் இன்றி எழுதப்பட்ட சில நூல்களில் இவ்வாறான சில செய்திகள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, நபிமார்களின் வரலாறுகள் ஆதாரமற்ற செய்திகளை வைத்து எழுதப்பட்டுள்ளன. அவற்றில் வரலாற்றில் இடம்பெறாத பல விடயங்கள் கற்பனைக் கதைகளாக இடம்பெற்றிருப்பதைக் காணலாம். அவ்வாறான நூல்களில் இருந்து பெறப்பட்ட கதைகள் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் அதிகமாக இடம்பெற்றிருப்பதை அவதானிக்க முடியும்.

**அலி (றழி) - பாத்திமா நாயகி திருமணம்:**

உமறுப்புலவர் அலி (றழி), பாத்திமா நாயகி ஆகியோருக்கிடையே இடம்பெற்ற திருமணத்தைப் பற்றி இருநூற்றி இருபது பாடல்களில் சித்திரித்துள்ளார். ஆனால் அவற்றில் இஸ்லாமியத் திருமணம் ஒன்றிற்கான அடிப்படைகள் பற்றி எதுவும் பாடவில்லை. மாறாக தமிழ் இலக்கியங்களில் அவருக்கு இருந்த பரிச்சயத்தையே அதில் வெளிப்படுத்தியுள்ளார். அல்லாஹ் வானவர்கள் அனைவரையும் ஒன்று கூட்டி இன்று இரவு சுவர்க்கத்தை அலங்கரியுங்கள். அலி (றழி) அவர்களுக்கும் பாத்திமா நாயகிக்கும் திருஷ்டி சுற்றி எறியுங்கள் என்று கூறினான் என புலவர் பின்வரும் பாடலில் சித்திரித்துள்ளார்:

''இற்றையி னிரவிற் சோதி யிலங்கிய சுவன நாடு

முற்றினுஞ் சிறப்பித் தன்பாய் முறை முறை வானோ ரியாரும்
வெற்றிவா ளலிக்குஞ் செவ்வி விளங்கிழை தமக்குந் திட்டி
சுற்றிவிட் டெறியு மென்னத் துய்யவ னுரைத்தான் மன்னோ''[15]

---

[13] உவைஸ், ம.மு., (1990), மு.கு.நூ, ப. 566

[14] வண்ணக் களஞ்சியப் புலவர், (1977), மு.கு.நூ, படியளந்தேலாப் படலம் : 7, 9, 10, ப. 114

திருஷ்டி சுற்றி எறிவது இஸ்லாமிய வழிமுறையல்ல. அல்லாஹ் இவ்வாறு செய்யும் படி கூறியிருந்தால் அவை அல்குர்ஆனிலோ ஹதீஸ்களிலோ இடம்பெற்றிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு எங்குமே இடம்பெறவில்லை. திருமணங்களின் போது தமிழ் கலாசாரத்திலிருந்து முஸ்லிம்களிடம் வந்து சேர்ந்த ஒரு மரபே திருஷ்டி சுற்றுவதாகும். அதனையே புலவர் பாதிமா நாயகியின் திருமணத்திலும் இடம்பெற்றதாக கற்பனை செய்து, அல்லாஹ் கூறியுள்ளான் என அதற்கு அங்கீகாரம் வழங்க முற்பட்டுள்ளார். மேலும், இவ்வாறு அல்லாஹ் கூறியதாக புலவர் கூறிவிட்டு அதனைக் கேட்ட வானவர்கள் சுவனத்திலுள்ள இளந்தை மரத்தின் (சிதுரத்துல் முன்தஹாவில்) அருகில் அலங்கரித்து அங்கு அலி (றழி), பாதிமா நாயகி ஆகியோரின் பெயர்களை வானவர்கள் உச்சரித்து, தீபங்களை ஏற்றி திருஷ்டியை சுற்றி எறிந்தார்கள் என புலவர் பின்வரும் பாடலில் கூறியுள்ளார்:

''மூதிருள் கடியுங் காந்தி சிதுறுத்துல முன்த ஹாவென்

றோதிய தருவின் பாலி லுயரலி பெயரும் பாத்தி

மாதிருப் பெயருங் கூறி வானவர் கரங்க ளாரச்

சோதிநின் றெறியத் திட்டிச் சுற்றி நின் றெறிந்திட்டாரால்''[16]

பாதிமா நாயகி, அலி (றழி) ஆகியோருக்கு மக்களின் கண்களால் ஆபத்துக்கள் ஏதும் இடம்பெறக் கூடாது எனக் கருதிய புலவர் இவ்வாறு வானவர்கள் கண்ணோறு கழிப்பதாகக் கற்பனை செய்து பாடியுள்ளார். தவிர இவற்றில் எவ்வித உண்மையும் இல்லை.

திருநெறி நீதம் பீர்முஹம்மத் அவர்களால் இயற்றப்பட்டது. இஸ்லாமிய மார்க்கம் தொடர்பான விடயங்கள் பற்றி நபிகளாரிடம் யூதர்கள் கேள்வி கேட்பதாகவும் அதற்கு நபிகளார் பதிலுரைப்பதாகவும் மேலதிக விளக்கம் தேவைப்படும் இடங்களில் ஸஹாபாக்கள் கேள்வி கேட்பதாகவும் அதற்கும் நபிகளார் பதில் கூறுவதாகவும் திருநெறி நீதம் எனும் நூல் அமைந்தள்ளது. இந்நூலில் நபிகளார் கூறியதாக அமைந்துள்ள சில கூற்றுக்கள் ஆசிரியராலேயே கூறப்பட்டுள்ளன என்பது தெளிவாகின்றது. உதாரணமாக: உலக ஆசைகளை வெறுத்தவனே ஈடேற்றம் பெறுவான் என்றும் உலகாசைகளை வெறுக்காவிட்டால் அவனுடைய ஈமானும் வணக்கமும் அவனைவிட்டு நீங்கிவிடும் என்று நபிகளார் கூறியதாக இந்நூல் கூறுகின்றது. அதாவது,

''வள்ளலாரிறசூ லுல்லா வவரிடு பேரைச் சேர்ந்த
தெள்ளிய மறையோர்க் கெல்லாம் திருநெறி நீதஞ் சொல்வார்
உள்ளத் திலுலகத் தாசை உகந்திடான் சரகக் கேறான்
கள்ளனாம் வணக்க மீமான் கருத்தை விட்டே குமென்றார்'' [17]

எனக் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறிய விடயங்களையே நபிகளார் மக்களுக்குப் போதித்தார். இஸ்லாத்தைப் பொறுத்தவரை மனிதனை பல்வேறு வகையான உணர்வுகளோடும் தேவைகளோடும் படைத்த அல்லாஹ் அவற்றையெல்லாம் விட்டு ஒதுங்கும் படி கூறவில்லை. இல்லற வாழ்க்கையில் ஈடுபடுவதற்கும், பொருளீட்டுவதற்கும் என மனிதனுக்கு உலக விடயங்களில் ஈடுபடுவதற்கு தாராளமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனைத்துச் செயற்பாடுகளுக்குமான முறையான வழிகாட்டலையும் இஸ்லாம் வழங்கியுள்ளது. அதற்கு மாற்றமாக உலக விடயங்களிலிருந்து ஒதுங்கி வாழ வேண்டும் என நபிகளாரும் கூறவில்லை. அல்லாஹ்வும் கட்டளை பிறப்பிக்கவில்லை. நேரம் அறிந்து செயலாற்றுவதையே இஸ்லாம் சிறந்த வணக்கமாகக் கருதுகின்றது. இவ்வாறான கருத்துக்கள் நபிகளாரின் கருத்துக்கள் என்ற பெயரில் இடம் பெறுவதற்குக் காரணம் பீர்முஹம்மத் சாஹிப் அவர்கள் ஆன்மீக நெறியில் கொண்ட ஈடுபாடாக இருக்க முடியும். ஆசிரியர் நான்காவது படலத்தில் இரண்டாவது பகுதியில் உள்ள 47, 477 ஆகிய செய்யுள்களில் தாம் இயற்றிய நூல் எத்தகைய பிசகையும் கொண்டதன்று என்றும் அது நிச்சயமானது, சத்தியமானது என்றும் கூறியுள்ளார். எனினும், இமாம் கஸ்ஸாலி, மௌலானா றூமி ஆகியோரின் கருத்துக்களின் தாக்கம் இவ்வாசிரியரிடம் அதிகமாகக்

---

[15] உமறுப்புலவர், (1999), சீறாப்புராணம் : தொகுதி 2 : பாடல் : 184, ப. 51

[16] உமறுப்புலவர், (1999), மு.கு.நூ, பாடல் : 128, ப. 52

[17] பீர் முஹம்மது சாஹிபு ஒலியுல்லா, (2007), திருநெறி நீதம் : படலம் : 2, பாடல் : 8,ப. 149

காணப்படுவதை இவரது பல பாடல்களில் அவர்கள் பற்றிய கருத்துக்கள் இடம்பெறுவதன் மூலம் அறிய முடியும். அதனால், ஆன்மீகத்திற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்ற உந்துதலால் ஆசிரியர் இவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்திருக்க முடியும்.

**நபிகளார் முன்னைய நபிமார்களின் வரலாற்றில் இருந்து சில சம்பவங்களை கூறிதான கற்பனை:**

கொடிது, பெரிது, சிறிது முதலியவற்றை விளக்க முற்படும் போது அதற்கு நபிகளார் முன்னைய நபிமார்களின் வரலாற்றில் இருந்து சில சம்பவங்களை கூறியே அவற்றை விளக்கியுள்ளார் எனக்கூறியுள்ளார். அதில் கொடிது எது என விளக்கும் போது, முதல் நபி ஆதம் (அலை) அவர்கள் தமது மனைவியின் சொல்லைக் கேட்டதால்தான் பெரும் சோதனைக்கு உள்ளானார் எனக் கூறியுள்ளார் ஆசிரியர். இதனை பின்வரும் பாடல் சித்திரிக்கின்றது:

"ஆகிய நபிதா னாதம் அரம்பையர் மொழியே கேட்டு
தாகிய கனியே உண்டு தனுமைக ளனேகம் பட்டார்
ஏகிய மடவாள் சொல்லை எவரும் கெட்டிடலுமாகும்
பாகிய கொடிதே என்று பாரினி லறிய வேணும்.." [18]

ஆதம் (அலை) அவர்களின் வரலாற்றை அல்குர்ஆனிலுள்ள அத்தியாயங்களான அல்பகரா : 30-38, ஆலஇம்ரான் : 33,59, அல்மாயிதா : 27, அல்அ:ராப் : 11-27, அல்ஹிஜ்ர் : 26,28,29, பனீஇஸ்ராயீல் : 61, அல்க:ப் : 50, மர்யம் : 58, தாஹா : 115-123, ஸாத் : 71-73, முதலிய வசனங்களில் கூறியிருப்பதனை அவதானிக்கலாம்.

"(பின்னர் இறைவன் ஆதமை நோக்கி) 'ஆதமே! நீங்கள் உங்களுடைய மனைவியுடன் இச்சோலையில் வசித்திருங்கள். நீங்கள் இருவரும் விரும்பிய இடத்திற்கு எல்லாம் (சென்று விரும்பியவற்றை எல்லாம்) புசியுங்கள். எனினும் இந்த மரத்தின் சமீபத்தில் கூட நீங்கள் செல்லாதீர்கள். (அவ்வாறு சென்றால்) அதனால் உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக் கொண்டவர்களாக ஆகிவிடுவீர்கள்' (என்று கூறினான்)

(எனினும்) அவ்விருவருக்கும் மறைந்திருந்த அவர்களுடைய மானத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துவதற்காக (இபுலீசாகிய) சைத்தான் (தவறான எண்ணத்தை) அவர்கள் மனதில் ஊசலாடச் செய்து அவர்களை நோக்கி '(அதன் கனியைப் புசித்தால்) நீங்கள் இருவரும் மலக்குகளாகவோ அல்லது மரணமற்றவர்களாகவோ ஆகிவிடுவீர்கள் என்பதற்காகவே அன்றி (வேறு எதற்காகவும்) உங்கள் இறைவன் இம்மரத்தை உங்களுக்குத் தடுக்கவில்லை' என்று கூறியதுடன்,

'நிச்சயமாக நான் உங்களுக்கு நன்மையையே கருதுகின்றேன்' என்று அவ்விருவரிடமும் சத்தியம் செய்து அவர்களை மயக்கி (அம்மரத்தின் கனியைப் புசிப்பதற்காக) அதன் பக்கம் அவர்களை செல்ல வைத்தான். அவ்விருவரும் அம்மரத்தின் பழத்தைச் சுவைக்கவே அவ்விருவரின் மர்ம உறுப்புகளும் அவர்களுக்குத் தெரிந்து அச்சோலையின் இலைகளைக் கொண்டு தங்களை மூடிக் கொள்ள அவர்கள் முயற்சித்தனர். அவ்வேளை இறைவன் 'அம்மரத்தைவிட்டும் நான் உங்களைத் தடுக்கவில்லையா? நிச்சமாக சைத்தான் உங்களிருவருக்கும் பகிரங்கமான எதிரி என்று நான் உங்களுக்கு கூறவில்லையா?' என்று அவ்விருவரையும் அழைத்துக் கூறினான்.

அதற்கு அவர்கள் 'எங்கள் இறைவனே! எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு அருள் புரியாவிட்டால் நிச்சமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்' என்று (பிரார்த்தித்துக்) கூறினர். (அதற்கு இறைவன் 'இதிலிருந்து) நீங்கள் வெளியேறிவிடுங்கள். உங்களில் ஒருவர்

---

[18] பீர் முஹம்மது சாஹிபு ஒலியுல்லா, (2007), மு.கு.நூ, படலம் : 1, பாடல் : 338, ப. 99

மற்றவருக்கு எதிரியாகிவிடுவீர்கள். பூமியில் தான் உங்களுக்கு தங்குமிடமுண்டு. (அதில்) ஒருகாலம் வரை சுகம் அனுபவிக்கலாம்.' என்று கூறினான்'' [19]

மேற்கூறப்பட்ட அல்குர்ஆன் வசனங்களில் இருந்து புலனாவது யாதெனில் ஆதம் (அலை) அவர்களையும் அவர்களது மனைவியையும் வழிகெடுத்தவன் ஷைத்தான் (இபுலீஸ்) ஆவான். எனவே, ஆதம் (அலை) அவர்கள், அவர்களது மனைவியின் பேச்சைக் கேட்டு வழிகெட்டார்கள் என ஆசிரியர் கூறுவது பிழையானதொரு கருத்தாகும். அதேபோல் சுலைமான் நபியவர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிந்ததை ஏற்றுக் கொண்ட அல்லாஹ், அவர்களுக்கு இவ்வுலகில் பெரும் ஆட்சியதிகாரத்தையும் வளங்களையும் வழங்கினான். இது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:

''ஆகவே அவர், 'என் இறைவனே! என்னுடைய குற்றங்களை மன்னித்து விடு! எனக்குப் பின்னர் எவருமே அடைய முடியாத ஓர் ஆட்சியை எனக்கு நீ அளித்தருள்வாயாக! நிச்சயமாக நீ பெரும் கொடையாளி' என்று பிரார்த்தனை செய்தார்.

ஆதலால் (அவர் விரும்பிய ஆட்சியைக் கொடுத்துக்) காற்றையும் அவருக்கு வசப்படுத்திக் கொடுத்தோம். அது அவருடைய கட்டளையின்படி, அவர் செல்லக்கூடிய இடங்களுக்கெல்லாம் (அவரைச் சுமந்து) சென்று கொண்டிருந்தது'' [20]

அதனால், சுலைமான் (அலை) அவர்கள் உலகில் பெரும் செல்வந்தராகவே விளங்கியவர். அவ்வாறு இருக்கும் போது, அவர் இறுதியில் வறுமையில் கஷ்டப்பட்டு ஊரெல்லாம் திரிந்து இரந்து உண்டார்கள். இதுவும் கொடிது என திருநெறி நீத ஆசிரியர் 339ஆவது பாடலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

''பாரினில் சுலையு மானார் படைத்திடுந் தனத்தைப் பார்த்து
ஆரவர் பொருளை எண்ணி அறிவது உலகி லுண்டோமீறிய
பெருமை யெண்ண மிவர் பர தேசியாக ஊரெலாம் இரந்தே
யுண்டார் உலகினி லிது கொடிதே'' [21]

சுலைமான் (அலை) ஒரு இறைத்தூதர். இரந்து உண்ணுதல் இறைத்தூதர்களுக்குரிய பண்பல்ல. ஜின்களைக் கொண்டு பைத்துல் முகத்தஸை கட்டுவிக்கும் பணி இடம்பெறும் போதுதான் அவர்கள் மரணமானார்கள். அவர்கள் உயிர்வாழும் வரை பெரும் செல்வந்தராகவே வாழ்ந்தவர் என்றே அல்குர்ஆனும் கூறுகின்றது. இதுவும் ஆசிரியரின் கற்பனையே ஆகும்.

**முடிவுரை:**

மேற்கூறப்பட்ட விடயங்களை வைத்து நோக்கும்போது இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைப் படைத்தோர் தமது இலக்கியங்களில் ரசனைக்கும் கற்பனைக்கும் அதிக முக்கியத்துவம் வழங்கியுள்ளனர். அதனால்தான் அல்லாஹ் கூறாத பல்வேறு விடயங்களையும் அல்லாஹ் கூறினான் என கற்பனை செய்து எழுதியுள்ளனர். இஸ்லாமிய இலக்கியங்களைப் படைப்போர், தாம் படைக்கின்ற இலக்கியங்கள் இஸ்லாமிய கோட்பாடுகளோடு முரண்படாமல் இருக்கும் வகையில் படைக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

---

[19] அல்குர்ஆன் : அல்அ.்.ராப் : 19 - 25

[20] அல்குர்ஆன் : ஸாத் : 35 - 36

[21] பீர் முஹம்மது சாஹிபு ஒலியுல்லா, (2007), மு.கு.நூ, படலம் : 1, பாடல் : 339, ப. 99

## உசாத்துணை நூல்கள்


1. இஸ்மாயீல், மு.மு., (1984), இனிக்கும் இராஜ நாயகம், சர்வதேச தமிழ் கற்கைகளுக்கான நிறுவனம், மதுரை.
2. உமர் ஷரீப் இப்னு அப்துஸ்ஸலாம், (தமிழாக்கம்), (2014),அர்ரஹீக் அல்மக்தூம் தாருல் ஹுதா, சென்னை.
3. உவைஸ், ம.மு., (பதிப்பாசிரியர்) (1991), புதூகுஷ்ஷாம் முதலாங் காண்டம் முகமதிய்யா - மூலமும் விளக்கவுரையும், மில்லத் பப்ளிஸர்ஸ், சென்னை.
4. உவைஸ், ம.மு., (பதிப்பாசிரியர்), (1989),புதூகுஷ்ஷாம் இரண்டாங் காண்டம் சித்தீக்கிய்யா- மூலமும் விளக்கவுரையும், மில்லத் பப்ளிஸர்ஸ், சென்னை.
5. உவைஸ், ம.மு.,(1990),இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி இரண்டு, காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.
6. உவைஸ், ம.மு., அஜ்மல்கான், பீ.மு.,(1990) இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி மூன்று, காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.
7. கனகவிராயர், (1990), கனகாபிஷேக மாலை, ஐந்தாம் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு, கீழக்கரை.
8. சாரண பாஸ்கரன், (1961), யூசுப் சுலைகா காவியம், யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ் சென்னை.
9. செய்குத் தம்பிப் பாவலர், கே.பி., (உரையாசிரியர்) (1999),சீறாப்புராணம் மூலமும் பொழிப்புரையும் இரண்டாம் பாகம், முகையதீன் ஆண்டகை குருபீடம், தமிழ்நாடு.
10. செய்யித் முஹம்மது ஹஸன், (பதிப்பாசிரியர்), (1999), சின்னச்சீறா என்று வழங்கும் சீறாப்புராணம், சென்னை.
11. நெயினார், (1990), திருமணக் காட்சி, மரைக்காயர் பதிப்பகம், சென்னை.
12. பீர்முஹம்மது ஒலியுல்லாஹ், (1977), ஞானப்புகழ்ச்சி, அஞ்சுவண்ணம் பீர் முகம்மதிய்யா முஸ்லிம் அசோஸியேஷன், தக்கலை.
13. பீர்முகம்மது சாஹிப், (2007), திருநெறி நீதம், இஸ்லாமிய இலக்கியக் கழகம், சென்னை.
14. மாணிக்கனார், அ., (பதிப்பாளர்) (1996), தாயுமானவரின் திருப்பாடல்கள் : மூலமும் உரையும், வார்த்தா பதிப்பகம், சென்னை.
15. வண்ணக்களஞ்சியப் புலவர், (1977), இராஜ நாயகம், கவிஞர் நாச்சிக்குளத்தார் பதிப்பகம், சென்னை
16. வடிவேல் முதலியார், ம., (உரையாசிரியர்), (2004), குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் உரையுடன், முல்லை நிலையம், சென்னை.
17. ஹஸ்ஸான், (1999), இஸ்லாத்தை மறந்த இலக்கியங்கள், இஸ்லாமிய கல்வி வெளியீட்டு நிறுவனம், சென்னை.